# தமிழ்நாடு

மாணவர்களே !நீங்கள் தமிழ் மொழியினைப் பேச படிக்க பெறும் பேறு பெற்றுள்ளீர்கள்.சற்று கண் மூடி கற்பனையில் மூழ்குங்கள்.....பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஒரு அழகான இனிய மொழி.

இயற்கை மனித இனத்திற்கு மட்டுமே பேசும் தனித் தன்மையைத் தந்துள்ளது.இந்த உண்மையை உணர்ந்த தமிழர் தம் மொழியை தெய்வமாக்கிக் கொண்டாடுகின்றனர்.[தமிழ் அன்னையின் அழகான் சிலை மதுரை மாநகரில் தமுக்கம் மைதானத்தில் உள்ளது.தமிழ் அன்னை இடதுகாலை மடித்து,வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்து உள்ளாள்.வலது கை இயல்,இசை,நாடகம் என்ற முத்தமிழின் மூன்று பிரிவுகளைக் காட்டுகிறது.இடது கை ஓலைச்சுவட்களை ஏந்தி உள்ளது.பழங்காலத்தில் தமிழகத்தை ஆண்ட மூன்று மன்னர்கள் குலம்----------சேரர் , சோழர் ,பாண்டியர் எனப்படும்.அவர்கள் மொழியின்மீது மரியாதை வைத்து வளர்த்தனர்.இவர்களை மதிக்கும் வகையில் சேரரின் வில்--அம்பு சின்னம்,சோழரின் புலிச்சின்னம்,பாண்டியரின் மீன் சின்னம் தமிழன்னை அருகில் பொறிக்கப்பட்டுள்ளன.]

நித்ய கன்னிகையாம் தமிழ்மகள்: பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகில் பல மொழிகள் இருந்தன.இந்தியாவில் வடபகுதியில் சமஸ்கிருதம்,பாழி,ப்ராக்ருதம் போன்ற மொழிகள்வழங்கின.தென்பகுதியில் தமிழ்,கன்னடம்,தெலுங்கு போன்ற மொழிகள் வழங்கின.இவற்றுள் தமிழ் மிவும் பழமை மிக்கது.தேவபாஷை எனப்படும் சமஸ்கிருதம் மிகவும் அற்புதமான பாஷை.இன்று எப்படி உலகம் முழுவதும் இங்லீஷ் பரவி உள்ளதோ அதைப் போல் அன்று சமச்கிருதம் பரவியது.இன்று அம்மொழி கலக்காத இந்திய மொழிகளே இல்லை.,இது உண்மை.ஆனால் இன்று அம்மொழி இந்து மதச் சடங்குகளிலும்,வீட்டு பூசைகளிலும்,கோயில்களிலும் மட்டுமே பயன் படுகிறது.உணவைப் பயன் படுத்தினால் தானே நல்லது?இல்லை என்றால் கெட்டுவிடும் இல்லையா?அது போல் ஒரு மொழியும் மக்களால் பேசப்பட்டால் தான் பல காலம் வாழும்.மாணவர்களே .,உங்களை அதிகக் கட்டுப்பாட்டுடன் வைத்து இருந்தால் பள்ளிக்கூடமே வெறுத்து விடும் அல்லவா?அது போலத்தான் சமஸ்கிருதம் தன் உயர்ந்த நிலையைப் பாதுகாக்க அதிகமான கட்டுப்பாடுகளை மக்களுக்கு விதித்தது.கஷ்டமான எதையும் நாம் விரும்புவோமா ?அப்படித்தான் மக்கள் அம்மொழியை மெதுவாக விட்டு வேறு மொழிகளைப் பயன்படுத்தினர்.

தமிழர் தமிழின் மகத்துவம் மாறாது,அதே சமயம் காலத்திற்கு ஏற்ப மக்களின் தேவைக்கு ஏற்ப மொழியை மாற்றினர்.ஆனால் கி.பி.பதிமூன்றுக்குப்பின் தமிழ் மொழியும் மக்களை மறந்து காசு பண ஆசையில் சின்ன ராஜாக்களை மகிழவைக்க வேண்டி மிகக் கஷ்டமான மொழியாகப் புலவர்களால் மாற்றப்பட்டது.ஆனால் அக்கால இலக்கியங்கள் பல இன்று நம்மால் மறக்கப்பட்டன.இன்று தமிழ் அறிவியல்,கணினி,தொழில் நுட்பம் எனப் பல துறைகளில் காலத்திற்கு ஏற்ப மாறி வாழ்ந்து வருகிறது.மொழியின் உடல்---உயிர் எது?நாம் தான் புரிந்ததா ?

**தமிழ் என்னும் திகட்டாத இனிப்பு;**

" யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் !" என்றார் மஹாகவி பாரதியார்.அவர் வெறும் மொழி வெறி உடையவர் அல்லர்.பல மொழிகள் பேசவும் படிக்கவும் தெரிந்தவர்.தமிழின் சிறப்பு தான் என்ன?

சப்தம்,இசை,இலக்கியம்,இலக்கணம் என்ற வளங்களை உடைய தமிழ் காலம் காலமாக மக்களை நெறி தவறாத வாழ்க்கையில் நடத்தி வருகிறது.

மனிதனாகப் பிறந்ததன் பயன் என்ன?ஆன்மீக உணர்வுடன் தெய்வீக வாழ்வை வாழ்வதே ஆகும்.இவ்வழிமுறையை சலைக்காமல் கூறி வருவதால் தமிழ் இனிமை,பெருமை,வளமை உடையது எனலாம்.ஆன்மீக உணர்வுடன் வாழும் மனித வாழ்வே முழுமையான வாழ்வு.இதுவே மோட்ச வாழ்வு.இதை 'வீடு பேறு' என்று தமிழ் கூறும்.இப்பேற்றினை அடைவதே மனிதனின் வாழ்க்கைப் பயன்.அவனை இப்பேற்றினை நோக்கி அழைத்துச் செல்கிறது தமிழ்.எனவே தான் இதை இனியமொழி என்பர்.வீடு பேறே மிக உயர்ந்தது.மிக உயர்ந்த நிலை 'செம்மை' எனப்படும்.எனவே தமிழ் செம்மொழிச் செந்தமிழ் ஆனது.

**பாருக்குள்ளே நல்ல நாடு:**

வடக்கே திருப்பதி முதல் தெற்கே கன்யாகுமரி வரை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகம் இருந்தது.தொல்காப்பியர் காலத்திற்கு முன் தமிழகம் இந்துமாகடலின் கீழிலும் பரவி

இருந்தது.ஆனால் கடலின் அகோர பசிக்கு உணவான கதை தெரியுமா??பாருக்குள்ளே நல்ல தமிழ்நாடு கடலுக்குள் போன கதை கேட்போமா???
உலகின் மிகத் தொன்மையான மக்கள்........

இன்றைய மதுரைக்கு அருகில் உள்ள பிரான்மலைப் பகுதியில் உள்ள பழங்குடிக் கள்ளர் இன மக்களே உலகின் பழமையான மக்கள் என்று சமீபகால ஆய்வுகள் கூறுகின்றன.கடல் உண்ட நிலப்பகுதி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பாண்டியர்கள் என்ற அரச குலத்தால் ஆளப்பட்ட பூமியாகும்.பண்டேயம் என்ற சொல்லின் மாற்றமே பாண்டியர் என்பதாம்.பாண்டியர் என்றால் மிகவும் பழமையானவர் என்பதாகும்.அவர்களின் ஆதி தொழில் மீன்பிடித்தல் ஆகும்.

பாண்டியரின் தொழில் பக்தி.......பார்வதிதேவியைக் குல தெய்வமாக வணங்கிய பாண்டியர் தம் குலத் தொழிலின் மீது மாறாத பக்தி வைத்து இருந்தனர்.எனவே தம் கொடியில் மீன் சின்னத்தை வைத்தனர்.தேவியின் வேப்பம் பூமாலையை அணிந்தனர்.

நாடே பரதேவதை........பார்வதியின் நாமங்களான குமரி,கன்னி என்ற பெயர்களையே தம் நாட்டிற்கும் வைத்தனர்.மலைகளும் குமரிமலைகளாயின.ஆறும் குமரிநதியாம்.
முதல் தமிழ்ச்சங்கம்:
கன்னித்தமிழின் மீது வைத்த மரியாதை மக்களை நல்வழிப்படுத்திடத் தூண்டியது.அகத்தியமாமுனியைத் தலைவராகக் கொண்டு முதல் தமிழ்ச்சங்கம் அழகான தலை நகராம் தென்மதுரையில் உருவானது.பல புலவர்கள் கூடி மக்களுக்குத் தேவையான வாழ்க்கைக்கூறுகளை பாடல்களாக எழுதினர்.அகத்தியர் 'அகத்தியம்' என்ர இலக்கண நூலை எழுதி மொழியை முறைப்படுத்தினார்.

**கடலுக்கு வந்த ஞானப்பசி ?**
சுனாமி என்னும் ஆழிப்பேரலைகள் பாண்டிய நாட்டை விழுங்கியது.சுனாமியைப் பற்றி மேலும் என்னால் கூற முடியவில்லை....!!!!நான் சென்னையில் சுனாமியில் தப்பியது இறைவனின் அருள் அன்றோ?இத்தமிழ் வரலாற்றை எழுதவன்றோ அடியேன் பிழைத்தது?

கடலிடம் தப்பிய மக்களும் மன்னனும் அச்சம் சிறிதும் இன்றி மீண்டும் பினிக்ஸ் பறவை போல் புதிய சமுகத்தை உருவாக்கினர்.ஹே!!! கடலே.,உனக்கு
மாபெரும் நன்றி!!!அன்று நீ எங்களை விழுங்காவிட்டால் இன்று உலகம் போற்றும் மீனாட்சியின் மாமதுரை உருவாகி இருக்குமோ?

பாண்டியர் பஃறுளியாற்றின் கரையில் மீண்டும் தம் பரம்பரையை உருவாக்கினர்.கபாடபுரம் என்று தலைநகருக்குப் பெயர் வைத்தனர்.உயிர் போயினும் தமிழ் போகாது அல்லவா?இரண்டாம் தமிழ்ச்சங்கம் உருவானது.

**அழியாத ஆசிரியர்:**

அகத்தியரின் பல மாணவர்களுள் தலைசிறந்தவர் தொல்காப்பியர்.இவரைப் பாண்டிய அரசன் அகத்திய நூலை ஒத்த தமிழ் இலக்கணம் ஒன்றை எழுத வேண்டினான்.அகத்தியம் தான் கடலால் விழுங்கப்பட்டதே!ஆசிரியர் அகத்தியர் அருளால் தொல்காப்பியர் இலக்கணம் எழுதத் தொடங்கினார்.

**உலகின் முதல் இலக்கணம்:**
தமிழில் கிடைத்த மிகப்பழமையான முழுமையான நூல் தொல்காப்பியம் ஆகும்.இலக்கு என்றால் லட்சியம்.லட்சியம் இல்லாத வாழ்வு வீண் அல்லவா?வாழ்வின் லட்சியம் எது?அதை அடைய என்ன செய்வது?எது உண்மையான வளமான நல்வாழ்க்கை?என்று கூறுவது இலக்கணம்.தொல்காப்பியர் அத்தகைய அற்புதமான இலக்கணத்தை எழுதியுள்ளார்.அதன் பெயர் தொல்காப்பியம்.இவர் யார்?

அகத்தியரின் மாணவர் தொல்காப்பியர் என்பர்.இன்றைய கன்யாகுமரி மாவட்டத்தில் பிறந்தார் என்பர்.இவர் தன் நூலை அரங்கேற்றம் செய்த போது பணம்பாரனர் என்ற மாமேதை கேட்டார்.அப்படி தொல்காப்பியத்தில் என்ன தான் உள்ளது?

**தொல்காப்பியத் தாய்:**
ஒரு அம்மா எப்படி தன் குழந்தைக்கு ஒவ்வொரு விஷயத்தையும் சொல்லித்தருகிறாளோ,அது போல் தொல்காப்பியமும் மக்களுக்கு வாழ்வின் வழிமுறைகளைச் சொல்லித்தருகிறது.சக்திவித்யா தொல்காப்பியத்தை வெறும் ஒரு தமிழ் இலக்கணப் புத்தகமாக பார்க்கவில்லை.நாம் கண்ட தொல்காப்பியம் இதோ,,,,,,,,,,,,,
*தொல்காப்பியம் மூன்று பிரிவுகளை உடையது.எழுத்து.,சொல்.,பொருள் அவை ஆகும்.
*எழுத்து..............தமிழ் படிக்கும் மாணவனுக்கு அரிவியல் ரீதியாக தமிழ் எழுத்துக்களின் பிறப்பு,உச்சரிக்கும் முறை போன்ற பல விஷயங்களைக் கூறுகிறது.இன்றைய லிங்விஸ்டிக்ஸ் அன்றைய எழுத்து பகுதி எனலாம்.ஏன் தமிழ்மக்களுக்கு தமிழ் பற்றி அவ்வளவு தெளிவாகவும்,விளக்கமாகவும் சொல்ல வேண்டும்?

அன்று பாண்டியர்கள் பல வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்தனர்.பல நாட்டினர் தமிழகத்தில் வந்து தங்கினர்.இன்றைய மதுரை மாநகர் சதா வெளிநாட்டு வியாபாரிகளின் கூட்டத்தாலும்,அவர்களின் மொழிகளின் ஒலிகளாலும் நிறைந்து இருந்தது என்று சங்க இலக்கியங்கள் கூறும்.அவ்வாறே கபாடபுரத்திலும் பல நாட்டினர் வந்து பழகும் வேளை அவர்கள் எளிமையாகத் தமிழ் படித்து வாழ தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

உடலின் எந்தப் பகுதியைப் பயன் படுத்தி எந்த எழுத்தை ஒலிக்க வேண்டும் என்று மிகத்தெளிவாக தொல்காப்பியர் சொல்கிறார்.

*சொல்..............தமிழ்ச் சொற்கள் எப்படிப் பட்டவை?அவற்றின் குணம் என்ன?போன்ற பல விஷயங்களைச் சொல் பகுதி கூறும்.
இவை இரண்டும் பெரிய விஷயங்கள் அல்லவே?எல்லா மொழிகளும் அதைச் சொல்லுமே!!!பின்?கடைசி பகுதியான பொருள் தான் முக்கியம்.

***பொருள் என்றால் என்ன?**

பொருள் என்றால் செல்வம்.
எது செல்வம்?
உயர்ந்த கல்வி.
கல்வியின் பயன்?
மனித வாழ்வின் குறிக்கோளை உணர்தல்.
அது எதுவோ?
மெய்ப்பொருள் காண்பது.
மெய்ப்பொருள் என்பது?
நமக்கெல்லாம் மூலம் எதுவோ ,அதை அறிந்து,தெளிந்து ஆன்மீக ஞானத்தால் மகிழ்ச்சியுடன் வாழ்தல்.
அப்படி வாழ்வதன் பயன்?
மக்களுக்கு செய்யும் தன்னலமில்லாத சேவை.
அதனால் கிடைப்பது?
அதுவே பிறவிப் பெரும் பயன்.,அதுவல்லவா மோட்சம் என்ற வீடு பேறு?!!!

**அது கிடைக்க என்ன செய்யவது?**

முறையான மனித வாழ்வை வாழ வேண்டும்.
அதை வாழ மனிதனுக்கு வழிகாட்டுவது?

சான்றோர் கூறும் அற நெறிகள்.
அவை மக்களை எப்படி அடையும்?
புலவர்களால்.,அவர் பாடும் நூல்களால்.
புலவர்களுக்கு வழிகாட்டுவது?

தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம்.

பாட்டை எப்படிப் பாடுவது என்று இலக்கணம் எல்லா மொழிகளிலும் உண்டு.

மக்களுக்கு எதைப் பாட வேண்டும் என்ற ஒழுங்குமுறையைக் கூறுவது தொல்காப்பியத்தின் ஒப்புமையற்ற தனிச்சிறப்பு!!!!!!!

இயற்கையுடன் சேர்ந்த வாழ்க்கை.....மாறினால்.......துன்பமே!!!

*தொல்காப்பியம் அன்றைய தமிழகத்தின் இயற்கை அமைப்பினைத் தெளிவாகக்கூறுகிறது.மூன்று பக்கங்களிலும் கடல்கள்,மலைகள்,வயல்கள்,காடுகள்,காய்ந்த பயன்படாத நிலங்கள்..,எனத் தமிழகம் இருந்தது.இன்று பெரும்பாலும் நிலங்கள் ஒரே மாதிரி கட்டிடங்களாக உள்ளன.
*ஐந்துவகை நிலங்களாக பூமி பிரிக்கப்பட்டது.
குறிஞ்சி------------மலைகள்
முல்லை------------காடுகள்
மருதம்----------வயல்கள்
நெய்தல்------------கடல்புரம்
பாலை-----------வீண் பூமி

**இயற்கையும் மனித ஒழுக்கமும்**
***********இப்பகுதியைப் படித்து உணர முதலில்,அமைதியான சூழல்,மனம் தேவை.இன்று மனிதன் மட்டும் தன்னை இயற்கையில் இருந்து பிரித்துக் கொண்டு வாழ்கிறான்.அதனால் வரும் ஆபத்துகளை அடிக்கடி அனுபவித்தும் ஆணவத்தினால் மாறாமல் வாழ்கிறான்.தொல்காப்பிய கால வாழ்க்கை இயற்கை முறை வாழ்க்கை ஆகும்.வானமும்,பூமியும்,தாவரங்களும்,பறவை,மிருகங்களும் மனிதனை வளமுடன் வாழ வைக்கவே உதவுகின்றன.அவன் அவற்றுடன் இணைந்து வாழ்ந்தால் நல்லது,இயற்கையின் ஒவ்வொரு விஷயமும் மனிதனுக்கு ஆசிரியர் என்பார் தொல்காப்பியர்.மனிதன் இயற்கையுடன் கூடி சந்தோஷமாக வாழ்வதைத் தொல்காப்பியம் காட்டுகிறது.வாருங்கள் காணலாம்............!!!

இந்தியாவின் வலிமை அதன் குடும்ப அமைப்பிலும் அன்பான வாழ்விலும் உள்ளது.நாகரிகமும் பண்பாடும் பரிணாமம் அடைய அடைய மனிதனின் முறையான வாழ்க்கை மேம்படுகிறது.குடும்ப அமைப்பின் ஆதாரம் கணவன்---------மனைவி உறவு.
*இவ்வுறவை வெறும் உடல் ரீதியான ,மன ரீதியான நிலையில் தொல்காப்பியம் காணவில்லை.
*இருவரும் இணைந்து சமுதாயத்தினையே வழி நடத்தும் தலைவர்களாகக் காட்டுகிறது தொல்காப்பியம்.
*எல்லையற்ற சுயநலமற்ற அன்பைப் பகிர்தல்,தானும் தன் மக்களும் நாடும் வாழ வேண்டும் என்ற சேவை மனப்பாண்மையுடன் தம்பதிகள் இல்லறம் காணக் கற்றுத் தருகிறது தொல்காப்பியம்.தலைவனும் தலைவியும் தன்னைச் சார்ந்த மக்களின் நன்மைக்காக அறங்கள் பல செய்து வாழும் இடமே இல்+அறம்===இல்லறம் ஆகும்.
*ஆணும் பெண்ணும் சமம்.ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து குறைகளை நீக்கி,பொறுத்து வாழ்வதே வாழ்க்கை என்கிறது தொல்காப்பியம்.
*காதல் என்பது உடலின் கவர்ச்சியால் வரினும்,இளமைத் துடிப்பின் வேகத்தினையும் தாண்டி மெதுவாக மனம் ஒன்றி ஆத்மாவை உணரக் கற்றுத் தருகிறது தொல்காப்பியம்.
*போகமான வாழ்வின் அடுத்த நிலை ஆன்மீகப் பயணமே என்று காட்டுகிறது.ஒருவருக்கொருவர் 'நான்' என்ற ஆணவம் துளி கூட இல்லாமல் விட்டுக் கொடுத்து வாழாவிட்டால் குழந்தைகளும்,சமுதாயமும் சீர்கெடும் என்று காட்டுகிறது.
*எப்படிப் பட்ட சூழல் வரினும் அன்பு மாறாமல்,ஒழுக்கம் மாறாமல் வாழ வேண்டும் என்று வடமொழி ராமாயணத்திற்கு இணையாக அக்காலத்தில் தைரியமாகக் குரல் கொடுக்கிறது தொல்காப்பியம்.
*ஆண்களும் பெண்களும் ஒழுக்கம் மாறி வெறும் உடல் இன்பமே வாழ்க்கை என்று வாழ்வதை அழகாக,பழத்துள் வைத்த மருந்து எனக் கண்டிக்கிறது.
*இந்தியாவின் பழங்காலப் பெண்ணிய வாதி தொல்காப்பியர்.ஆண்கள் செய்யும் ஒழுக்கக் கேடுகளை{பரத்தை ஒழுக்கம்,குடி,}நல்ல குலப்பெண்களின் ப்ரதிநிதியாக இருந்து கண்டிக்கிறார் தொல்காப்பியர்.
*ஆனால் இவை எல்லாம் இலைகளுக்குள் மறைந்துள்ள பழங்கள் போலவே காணப்படும்.விழிப்புணர்வுடன் படித்து உணர வேண்டும்.

*நவீன கல்வியில் செக்ஸ் கல்வியை வலியுறுத்துகிறார்கள்.அழகான இளமையை வர்ணிக்கும் வழியில் முறையான செக்ஸ் விழிப்புணர்வு சொல்லப் படுகிறது.
*சங்க இலக்கியம் அன்றைய பத்திரிக்கைத்துறை .புலவர்களால் சமுதாயத்திற்கு சொல்லப்பட்ட செய்திகள் ஏராளம்.
*அரசர்கள் ஆண்ட போதும்,அரசனின் உயர்ந்த பண்பையும்,அதே சமயத்தில் அரசன் தவறு செய்யும் போது எடுத்துக்கூறும் தைரியத்தினையும் அன்றைய புலவர்களின் எழுத்துச் சுதந்திரமாக தொல்காப்பியர் கூறுகிறார்.
*சமுதாயத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும் போது கேளிக்கைகளும்,தனிமனித ஒழுக்கமும் கவனிக்கப்பட வேண்டும் என்கிறது தொல்காப்பியம்.
*அன்றைய தமிழகத்திலும் பல தவறுகள் இருந்தன.பல தனிமனித ஒழுக்கமுறைகள் தவறின.ஆனால் புலவர்கள் அவற்றை விட்டுவிட்டு பாஸிட்டிவ் விஷயங்களையே மக்களிடம் கூறிடத் தொல்காப்பியம் வழிப்படுத்தியது.
*உடல் காமத்தினைக் கூட விரசம் இல்லாமல் கூறிட வலியுறுத்தியது.மீறிய நிலையில் எழுதப்பட்ட பாடல்களைச் சங்கம் ஏற்கவில்லை.
*இன்றைய நாடாளும் அதிபர்களின் கவனத்திற்கு..........................????/
பகை உணர்வால் ஒரு நாடு மற்றொரு நாட்டை அதிநவீன ஆயுதங்களால் தாக்கி அப்பாவி மக்களைக் கொல்லும் பரிதாபத்தினைக் காண்கிறோம்.மன்னர்கள் தாங்களே எல்லாம் என்று வாழ்ந்த அக்காலத்தில்,சண்டை போடும் போது கூட அதில் ஒழுக்கமும்,கட்டுப்பாடும்,மக்களை அநியாயமாகக் கொல்லும் வெறித்தனத்தினையும் தொல்காப்பியம் கண்டித்து,அதற்கு இலக்கணம் கூறுகிறது.
*பாட்டு எப்படி அமைய வேண்டும்? அதன் அளவு என்ன? விதவிதமான ராகங்கள் என்ன? என்று இலக்கணம் சொல்கிறது தொல்காப்பியம்.ஏன் தெரியுமா?
நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் மக்களின் நன்மைக்காகவே அமைய வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையை உணர்த்துகிறது.
*இன்றைய மாஸ்கம்யூனிகேஷன் மீடியாக்கள் எளிய மக்களை மறந்து வருகின்றன.அது மஹாஆபத்து!!!!!
தொல்காப்பியம் சமுதாயத்தின் எல்லாத் தரப்பு மக்களையும் பார்க்கச் சொல்கிறது
*இன்பமான வாழ்வு உடல் ஊனம் உற்றவர்களுக்கு உண்டா இல்லையா???இதற்கு பதில் தொல்காப்பியத்தில் தேடிட வேண்டும்.அவர்களைப் பற்றிப் பாடாததால் அவர்களைச் சமுதாயம் ஒதுக்கியது என்று கூறிட முடியாது.
*உடல் ஊனம் உற்றவர்கள் மனதால் வாழ்வதே வளமான வாழ்வு என்ற உண்மையை உணர்ந்து இல்லறம் கண்டிப்பாக செய்திருப்பர்.
*தலைவனும் தலைவியும் பல விதத்திலும் ஒத்த நிலையில் பாகுபாடு இன்றி தகுதிபெற்று இருக்க வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.
*இலக்கியமும் அறிவியலும்:
இன்று இலக்கியமும் அறிவியலும் பிணைந்து செயல்பட பல முயற்சிகள் நடைபெறுகின்றன.ஆனால் தொல்காப்பியர் அன்றே இலக்கியத்தில் அறிவியலை வைத்தார்.உயிர்களின் பரிணாம வளர்ச்சியினை மிகத்தெளிவாக எடுத்துக் கூறுகிறது தொல்காப்பியம்.
*மனிதனை மட்டும் மிக உயர்ந்த உயர்திணையாகப் பகுத்துக் காட்டுகிறார்.ஆறு அறிவு படைத்த மனிதன்,சிந்திக்க முடிந்தவன்,மனம் என்ற ஒன்றினை உடையவன்.தன் அறிவால் உலகிற்கு நல்வழி காட்டிடவே பிறப்பவன்.அதனால் தான் அவனை உயர்திணையாக பகுத்தார் தொல்காப்பியர்.
தொல்காப்பியத்தின் உயர்ந்த விஷயங்களை இன்னும் பின்னால் காணலாம்.

தமிழ்ச்சங்கத்தில் பல புலவர்கள் தொல்காப்பியத்தின் வழியில் பல பாடல்களை எழுதினர்.
விட்டதா கடல்?மறுபடியும் அடித்த சுனாமியால் இரண்டாம் தமிழ்ச்சங்கமும் சமூகமும் அழிந்தன.தப்பிய பாண்டியனும் மக்களும் கடல் இல்லாத சமவெளியைத் தேடி ஓடினர்.................................

*****மூன்றாம் தமிழ்ச்சங்கத்தின் வரலாறு ,மதுரை மாநகரின் வரலாற்றினொடு தரப்படுகிறது.

நான் மாடக்கூடல்.......................ஃபைலைப் பார்க்கவும்